## தமிழ்நாட்டிற்கு ‘சமக்ரா சிக்ஷா’ திட்டத்தின் கீழ்

# ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையினை விரைந்து வழங்கிடுவீர்!

## பிரதமர் நரேந்திர மோடிக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

சென்னை, ஆக. 29 -

தமிழ்நாட்டிற்கு “சமக்ரா சிக்ஷா” திட்டத்தின்கீழ் ஒன்றிய அரசு வழங்கவேண்டிய நிலுவைத் தொகையினை விரைந்து வழங்கிட நடவடிக்கை எடுக்கக் கோரி பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு,

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

அதன் விவரம் வருமாறு :-

“சமக்ரா சிக்ஷா” என்கிற ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய நிலுவைத் தொகையினை மாணவர்களின் நலன் கருதி உடனடியாக விடுவிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.8.2024) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாடு மற்றும் சில மாநிலங்களில், “சமக்ரா சிக்ஷா” திட்டத்தின்கீழ் வழங்கப்பட வேண்டிய முதல் தவணை நிதி விடுவிக்கப்படவில்லை என்ற செய்திகள் தொடர்பாக இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நாட்டின் கல்வித் துறையில், ஒன்றிய அரசின் நிதியுதவியோடு செயல்படுத்தப்படும் முதன்மையான திட்டம் இது என்பதால், முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் திட்டத்தின்கீழ் உரிய நேரத்தில் நிதியை விடுவிப்பது மிகவும் அவசியம் என தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும், ஆசிரியர்களுக்கான ஊதியம் மற்றும் கல்வியின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் புதிய முயற்சிகள் போன்றவற்றிற்கு திட்ட ஒப்புதல் வாரியத்தின் (Project Approval Board) ஒப்புதலுக்கு உட்பட்டு நிதி விடுவிக்கப்படுகிறது என்று தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதன்படி, 20242025 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டிற்கு 3,586 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும், இதில் ஒன்றிய அரசின் பங்கு 2,152 கோடி ரூபாய் (60 விழுக்காடு) என்றும் தெரிவித்து, ஒன்றிய அரசின் அந்த பங்களிப்பினைப் பெறுவதற்கு ஏதுவாக முன்மொழிவுகள் ஏப்ரல் 2024லேயே சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், முதல் தவணையான 573 கோடி ரூபாயினை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இதுதவிர, முந்தைய ஆண்டுக்கான 249 கோடி ரூபாயையும் ஒன்றிய அரசு இன்னும் விடுவிக்கவில்லை என்றும் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இதற்கு முன்பும், தமிழ்நாட்டிற்கு நிதி விடுவிக்கப்படுவதை உறுதி செய்யுமாறு மாண்புமிகு ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களுக்கு தான் கடிதம் எழுதிய பின்னரே நிலுவையில் உள்ள நிதியில் ஒரு பகுதி கடந்த நிதியாண்டில் தமிழ்நாட்டிற்கு விடுவிக்க ப்பட்டது என்று தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து, உரிய நேரத்தில் மானியங்களை விடுவிக்கக் கோரி ஜூலை மாதம் கோரிக்கை வைத்த நிலையிலும், இது வரை “சமக்ரா சிக்ஷா” திட்டத்தின் கீழ் மாநில அரசுக்கு மானியம் விடுவிக்கப்படவில்லை என்று வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

சமீபத்தில், பி.எம்.ஸ்ரீ (PM SHRI) பள்ளிகளில் தேசிய கல்விக் கொள்கையை (NEP) முழுமையாக அமல்படுத்துவதை, தற்போதைய “சமக்ரா சிக்ஷா” திட்டத்தின்கீழ் நிதியை அனுமதிப்பதற்கான முன்நிபந்தனையாக இணைக்க ஒன்றிய அரசு முயற்சிப்பது தெரிய வந்துள்ளது என்றும், புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ள மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், தேசிய கல்விக் கொள்கை 2020ல் உள்ள குறிப்பிட்ட சில விதிகள் ஏற்புடையதாக இல்லை என்றும், பி.எம்.ஸ்ரீ. பள்ளிகள் திட்டத்தில் சேர புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறைந்தபட்ச மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டின் கோரிக்கை இன்னும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாடு போன்ற முன்னோடி மாநிலங்கள், பள்ளிக் கல்வியிலும், உயர்கல்வியிலும் பல சிறப்பான புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருவது அனைவரும் அறிந்த ஒன்று என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், பிராந்திய அடிப்படையில் சமூகபொருளாதார நிலைமைகள், உள்கட்டமைப்பு வசதிகள், நிதி ஆதாரங்கள் போன்றவற்றில் வேறுபாடுகள் இருக்கும் நிலையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பொதுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள கல்வி தொடர்பான விஷயங்களில் மாணவர்களை பாதிக்கும் கொள்கைகளை அமல்படுத்தும் போது, அதில் ஒவ்வொரு மாநிலத்தின் நியாயமான கருத்தும் உள்ளடங்கி இருக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

“சமக்ரா சிக்ஷா” என்கிற ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய நிதியினை நிறுத்தி வைக்கும் ஒன்றிய அரசின் தற்போதைய நடவடிக்கை, பின்தங்கிய நிலையில் வாழும் இலட்சக்கணக்கான குழந்தைகளின் கல்வி மற்றும் ஆசிரியர்களை நேரடியாக பாதிக்கும் என்று தெரிவித்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இத்தகைய நடவடிக்கை “சமக்ரா சிக்ஷா” திட்டத்தின் நோக்கமான “எந்தவொரு குழந்தைக்கும் கல்வி வாய்ப்பு மறுக்கப்படக் கூடாது” என்பதற்கு எதிரானது என்றும் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, “சமக்ரா சிக்ஷா” திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய நிலுவைத் தொகையினை உடனடியாக விடுவித்திட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இதில் நேரடியாக தலையிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டதோடு, விவாதங்கள் தேவைப்படும் ஒரு கொள்கையினை கல்விக்கான நிதி வழங்கிடும் விஷயத்துடன் பொருத்திடக் கூடாது என்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### நகராட்சி நிருவாகம் - குடிநீர் வழங்கல் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

# வடகிழக்குப் பருவ மழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஆக. 29 -

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவ மழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் அமைச்சர் அவர்களின் முகாம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (27.08.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது :

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் நடைபெற்று வரும் பாலப்பணிகள், சாலைகள், நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள், அறிவுசார் மையங்கள், சமுதாயக் கூடங்கள், பள்ளிக் கட்டடங்கள், பேருந்து நிலையங்கள், சந்தைக் கட்டமைப்புகள், குடிநீர் திட்டப்பணிகள், பாதாளச் சாக்கடைத் திட்டப்பணிகள் உள்ளிட்ட அனைத்து வளர்ச்சித் திட்டப்பணிகளையும் விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும்.

மேலும், வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்கின்ற வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மழைநீர் வடிகால் பணிகள், குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்றவுடன் சாலை சீரமைக்கும் பணி களை உடனடியாக தொடங்கி நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப் பெற்று போக்குவரத்திற்கு இடையூறின்றி இருக்கும் நிலையினை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும்.

வடகிழக்குப் பருவ மழை தொடங்குவதற்கு முன்னதாக மழைநீர் வடிகால் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும். மழைநீர் வடிகால் கட்டமைப்பு இல்லாத இடங்களில் உரிய இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பணிகளை முடித்திட வேண்டும். நீர்நிலைகள் மற்றும் கால்வாய்கள் முழுமையாக தூர் வாரப்பட்டு மழைநீரினை சேகரிப்பதற்காக தயார் நிலையில் வைக்க வேண்டும். ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால்களை தூர் வாரி மழைநீர் தடையின்றி செல்வதை உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், மழைக்காலங்களில் நீர் தேங்கும் பகுதிகளில் உள்ள வடிகால்களில் அடைப்புகளைக் கண்டறிந்து மழைநீர் வடியும் வகையில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கண்காணிப்பு பணிகளை தினசரி மேற்கொள்ள வேண்டும்.

தாழ்வான இடங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாட்டு பணிகள் மற்றும் வெள்ளப் பாதிப்புகளிலிருந்து பொது மக்களை பாதுகாக்கும் பொருட்டு நிவாரணப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக அலுவலர்களைக் கொண்டு சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். ஏரிகள் மற்றும் குளங்களுக்கு அருகில் வசிக்கக்கூடிய பொதுமக்களையும், தாழ்வான பகுதிகளில் குடியிருப்பவர்களையும் நிவாரண மையங்களில் பாதுகாப்பாக தங்க வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அனைத்து நிவாரண மையங்களிலும் முழுமை யாக அனைத்து வசதிகள் மற்றும் முன்னேற்பாடுகளுடன் தயார்நிலையில் வைத்திட வேண் டும். மேலும், இந்த மையங்களில் ஜெனரேட்டர் வசதி, மின்வசதி, குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் உணவு தயாரித்து வழங்குவற்கான ஏற்பாடுகள் ஆகியவற்றை தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும். வடகிழக்குப் பருவமழையின் போது பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், ஜெனரேட்டர்கள், ஜெ.சி.பி. வாகனங்கள், கழிவு நீரகற்றும் வாகனங்கள், திடக்கழிவு மேலாண்மை வாகனங்கள் உள்ளிட்டவற்றை இயங்கும் வகையில் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பொதுமக்களுக்கு தங்குதடையற்ற வகையில் குடிநீர் வழங்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட வேண்டும். மேல்நிலை/ கீழ்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளை உரிய சுழற்சி முறையில் சுத்தம் செய்து குடிநீரில் போதிய குளோரின் கலந்து குடிநீர் விநியோகத்தைக் கண்காணிக்க வேண்டும்.

நகர்ப்புர சுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து சுகாதாரப் பணியாளர்களும் தயார்நிலையில் இருப்பதை உறுதி செய்திட வேண்டும். மேலும், நடமாடும் சுகாதாரக் குழுக்களை அமைத்து மழை யினால் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் விரைவாக சென்று மருத்துவ உதவிகள் அளிக்கப்பட வேண்டும். அனைத்து சுகாதார மையங்களிலும் போதிய மருந்துகளை இருப்பில் வைத்திருக்க வேண்டும்.

வடகிழக்குப் பருவமழையின்போது, பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் இல்லாத வகையில் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியினை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/ தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எஸ்.விஜயகுமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் ஹனீஸ் சாப்ரா, தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக (TUFIDCO) மேலாண்மை இயக்குநர் கே.விவேகானந்தன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில், நேற்று முன்தினம் (27.08.2024) முகாம் அலுவலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத்தின் (TNUIFSL) தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எஸ்.விஜயகுமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், புதிய திருப்பூர் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் ஹனீஸ் சாப்ரா தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழக (TUFIDCO) மேலாண்மை இயக்குநர் கே. விவேகானந்தன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய் பேரூராட்சிகளின் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட

# ஒன்றிய, பகுதி, பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிவிப்பு!



தஞ்சாவூர், ஆக. 29 -

தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளதாக மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : 16.08.2024 அன்று சென்னையில் நடைபெற்ற மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, பகுதி, மற்றும் பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க் கண்டவாறு நடைபெறுகின்றது. இக்கூட்டத்தில் முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய மற்றும் பேரூர் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

29.08.2024 வியாழன் காலை 10.00 மணி கும்பகோணம் மேற்கு, பெரியார்நினைவு சமத்துவபுரம், பம்பப்படையூர்.

30.08.2024 வெள்ளி மாலை 04.00 மணி திருப்பனந்தாள் மத்தியம், எஸ்.வி.மஹால், குறிச்சி.

31.8.2024 சனி காலை 10.00 மணி திருவிடைமருதூர் தெற்கு, நீலாவதி திருமண மண்டபம், நாச்சியார்கோயில். காலை 11.00 மணி கும்பகோணம் மாநகரம் பகுதி 3, எ.ஆர்.ஆர். லைலா மஹால் கும்பகோணம். மாலை 04.00 மணி திருவிடைமருதூர் வடக்கு, கலைஞர் பாசறை, திருவிடைமருதூர். கும்பகோணம் மாநகரப் பகுதி 1 மாலை 05.00 மணி, மல்லிகை மஹால் கும்ப கோணம்.

01.09.2024 ஞாயிறு காலை 09.00 மணி பாபநாசம் தெற்கு, துர்கா திருமண மண்டபம், பாபநாசம். காலை 10.00 மணி கும்பகோணம் மாநகரப் பகுதி 2 பாலாஜி மஹால் கும்பகோணம். காலை 11.00 மணி பாபநாசம் பேரூர், பேரூர் கழக அலுவலகம், பாபநாசம். மதியம் 12.00 மணி திருப்பனந்தாள் மேற்கு, கலைஞர் மாளிகை திருப்பனந்தாள். மாலை 03.00 மணி திருப்பனந்தாள் கிழக்கு டைமண்ட மஹால் பந்தநல்லூர். மாலை 04.00 கும்ப கோணம் மாநகர பகுதி 4, சங்கமம் மஹால், கும்பகோணம். மாலை 06.00 ஆண்டவர் மண்டபம், சோழபுரம்.

02.09.2024 திங்கள் காலை 10.00 மணி சோழபுரம் பேரூர், ஆண்டவர் மண்டபம், சோழபுரம். காலை 11.00 மணி அய்யம்பேட்டை பேரூர் ஜி.ஏ.ஆர். திருமண மண்டபம், அய்யம்பேட்டை. மாலை 04.00 மணி திருபுவனம் பேரூர் கோ.சி.மணி அறிவாலயம், திருபுவனம்.

03.09.2024 செவ்வாய் காலை 09.00 மணி அம்மாபேட்டை வடக்கு, அண்ணாமலையார் திருமண மண்டபம், உடையார்கோவில். காலை 10.30 பாபநாசம் வடக்கு, ஆர்.எஸ். மஹால், கபிஸ்தலம். மதியம் 12.00 அம்மாபேட்டை தெற்கு, ஏ.எம்.ஆர்.திருமண மண்டபம், அம்மாபேட்டை. மாலை 03.00 மணி, திருப்பனந்தாள் பேரூர், கலைஞர் பாசறை திருப்பனந்தாள். மாலை 04.00 மணி கும்பகோணம் மத்தியம், தாஜ் மஹால், கும்பகோணம். மாலை 05.00 மணி, அம்மாபேட்டை பேரூர், மக்கள் மன்றம், அம்மாபேட்டை. மாலை 06.00 மணி சுவாமிமலை பேரூர் மங்கள மஹால், சுவாமிமலை.

04.09.2024 புதன் காலை 10.00 மணி கழக அலுவலகம், மெலட்டூர், மாலை 04.00 மணி வேப்பத்தூர் பேரூர், ஹரி மஹால் வேப்பத்தூர்.


05.09.2024 வியாழன் காலை 10.00 மணி திருவிடைமருதூர் பேரூர், கலைஞர் பாசறை திருவிடைமருதூர்.

06.09.2024 வெள்ளி மாலை 04.00 மணி, திருநாகேஷ்வரம் பேரூர், சுந்தரேச முதலியார் மண்டபம், திருநாகேஷ்வரம், மாலை 06.00 மணி, ஆடுதுறை பேரூர், முன்னாள் அமைச்சர் கோசி.மணி இல்லம்.

கூட்டத்தின் பொருள் :

1. 2024 செப்டம்பர் 13 முன்னாள் அமைச்சர் கோசி.மணி பிறந்தநாள் விழா.
2. 2024 செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா அவர்களின் 115 ஆவது பிறந்த நாள் விழா.
3. 2024 செப்டம்பர் 16 தி.மு.கழகத்தின் பவள விழா.
4. 2024 செப்டம்பர் 17 தந்தை பெரியார் அவர்களின் 145வது பிறந்தநாள் விழா.
5. மாநகர, ஒன்றிய, பேரூர் மற்றும் பகுதி கழகங்களில் சார்பு அணி நிர்வாகிகள் நியமித்தல்.
6. வார்டு, கிளைகழ கங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவது.
7. நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வேட்பாளர் வெற்றிக்கு பாடுபட்ட கழக தோழர்களுக்கு நன்றி தெரிவித்தல்
8. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. அறிக்கை வெளியிட்டுள்ளார்.



கழகத் தலைவர் அவர்களின் உற்ற நண்பர் மேனாள் சட்டமன்ற உறுப்பினர்அன்பில் பொய்யாமொழி அவர்களின் 25ஆம் ஆண்டு நினைவு நாளில், திருச்சி தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அன்பில் பொய்யாமொழி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரை வைகோ, திருச்சி மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன், மாவட்ட கழக நிர்வாகிகள் சேகரன், சபியுல்லா, செந்தில், பகுதி செயலாளர் மோகன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.